**ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்**
**சாதாரணக் கூட்டம்**

**2021 ம் ஆண்டு ஜீலை மாதம் 30 ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

*முன்னிலை :- திருமதி. D. மல்லிகா, B.Sc,*
*தனி அதிகாரி.*

**பொருள் எண் : 155**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 15.04.2021 ம் தேதிய கடிதத்தில் மத்திய அரசு ஜல் சக்தி அபியான் ( நகர்ப்புறம் ) 2021 திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்தின் கீழ் பின்வரும் 7 செயல்பாடுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) மழைநீர் சேமிப்பு அமைப்பு புணரமைப்பு செய்தல்.
2) மரம் நடுதல்.
3) தண்ணீர் கால்வாய் சுத்தம் செய்தல்.
4) நீர் நிலைகள் புணரமைத்தல்.
5) பயன்படுத்தப்பட்ட தண்ணீர் மறு சுழற்சி செய்து பயன்படுத்துதல்.
6) நீர் ஊடுருவும் பசுமைப் பகுதி ஏற்படுத்துதல்.
7) ஜல் சக்தி பார்க் அமைத்தல்.

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் ஜல்சக்தி அபியன் திட்டத்தில் பின்வரும் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

1) நகரில் உள்ள 26 திறந்த வெளி கிணறுகள் மற்றும் 66 பயனற்ற ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்பு அமைப்புகளாக மாற்றம் செய்தல்.
2) அசோக் நகர் பூங்கா அப்பகுதியில் தாழ்வான பகுதியாக உள்ளதால் மழை காலங்களில் மழைநீர் கூடுதலாக சேகரிக்க வாய்ப்பு உள்ளதால் இந்த இடத்தில் Jal Sakthi Park அமைத்தல்.

மேற்கண்ட இரு பணிகள் இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக ஒப்புதல் பெற்று பணி செய்யப்பட உள்ளது. மேலும் நகரில் தினமும் சராசரியாக 30 முதல் 40 லட்சம் லிட்டர் குடிநீர் நகர் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிலையில் இதிலிருந்து தினமும் சராசரியாக 25 லட்சம் லிட்டர் கழிவு நீர் வெளியேறுவதை சுத்திகரிப்பு செய்து நகரில் உள்ள நீர் நிலைகளில் சேகரிப்பு செய்யும் பட்சத்தில் நீர்மட்டம் மேம்பட்டு நகரில் குடிநீர் தட்டுப்பாடு இல்லாத நிலை ஏற்படும். நகராட்சிக்கான செண்பகத்தோப்பு திட்டம் மூலம் 30 லட்சம் லிட்டர் தினந்தோறும் பெறும் நிலையில் வறட்சி காலத்தில் 10 லட்சம் லிட்டர் மட்டுமே பெற இயலும். மேலும் மழை குறைவான பகுதியில் இந்நகராட்சி அமைந்துள்ளதாலும் நிலத்தடி நீர் மட்டம் 300 அடிக்கு கீழ் உள்ளதாலும் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து அருகில் உள்ள நீர் நிலைகளில் விடும் நிலையில் நிலத்தடி நீர் மட்டம் மேம்படும் வாய்ப்பு உள்ளது. எனவே இத்திட்டத்தினை செயல்படுத்தவும், அதற்கான பிரேரணை தயார் செய்திட கலந்தாலோசகர் ( Consultant ) நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ஒப்புதல் பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண் 4409/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 156**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி செண்பக தோப்பு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கிணறு எண் 3 ல் உள்ள 5 எச்.பி மின் மோட்டார் முழுவதும் பழுது ஏற்பட்டு சரி செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே புதிய 5 எச்.பி மோட்டார் வாங்கி பொருத்தவும் அதற்கான செலவு தொகை ரூ.46,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** செண்பக தோப்பு தலைமை நீரேற்று நிலைய கிணறு எண் 3 ல் உள்ள 5 எச்.பி மின் மோட்டார் முழுவதும் பழுது ஏற்பட்டு சரி செய்ய இயலாத நிலையில் உள்ளதால் புதிய 5 எச்.பி மோட்டார் வாங்கி பொருத்தவும் அதற்கான செலவு தொகை ரூ.46,000/- க்கும் மன்ற அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4522/2021/1/ E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 157**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் சமீபத்திய மழை மற்றும் காற்றின் காரணமாக பின்வரும் இடங்களில் உள்ள மரங்கள் விழுந்துள்ளது.

| | |
|---|---|
| மடவார்விளாகம் பகுதி | 10 மரக்கிளைகள். |
| கற்பக விநாயகர் கோவில் தெரு | 2 மரக்கிளைகள். |
| சக்கரைக் குளம் தெரு | 1 மரக்கிளைகள். |
| நாடக சாலைத் தெரு | 1 மரக்கிளைகள். |
| நகராட்சி அலுவலக வளாகம். | 1 மரக்கிளைகள். |

மரக்கிளைகள் சாலையில் விழுந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் மேற்கண்ட விவரப்படி மரக்கிளைகளை பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம். மரக்கிளைகள் சாலையில் விழுந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் அவசர அவசியம் கருதி ஏலம் விடப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4409/2021/ E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 158**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ரைட்டன்பட்டித் தெரு விரிவாக்கப் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் இல்லாததால் உள்ளதால் புதிய குடிநீர் இணைப்பு வழங்க வேண்டி பணம் செலுத்திய நபர்களுக்கு பகிர்மானக்குழாய் அமைத்தால்தான் குடிநீர் இணைப்பு வழங்க இயலும். அப்பகுதியில் வசிக்கும் திருமதி. சித்ரா என்பவர் 17.11.2020 ல் இரு புதிய இணைப்புகளுக்கு தொகை செலுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட தெருவில் பகிர்மானக் குழாய் அமைக்கவும் அதற்காக ரூ.14,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம். குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதை அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4047/2021/ E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 159**

நகராட்சி அலுவலக குடிநீர் டேங்கர் வாகனத்தில் தகுதி சான்று பெற பின்வரும் பழுது வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

1) ஆயில் சர்வீஸ் செய்தல், புதியதாக ஆயில் பில்டர், டீசல் பில்டர் மற்றும் பிரேக் ஆயில் மாற்றுதல்.
2) வாகனத்தில் கலர் புதுப்பித்தல் மற்றும் நம்பர் பிளேட் புதுப்பித்தல்.
3) மாசுக்கட்டுப்பாடு சான்றிதழ் பெற்று தருதல்.
4) நான்கு வீல் சீரியஸ் பேக் செய்தல்.
5) கியர் பாக்ஸ், கிரவுண் ஆயில் மாற்றுதல்.
6) வானத்தில் வெல்டிங் வேலைகள், பிரேக் செக்கப் செய்தல்.
7) வீல் கிரிஸீங் நிப்பிள் கிரிஸிங் செய்தல்.
8) ஸ்டிக்கர் ஒட்டி தகுதி சான்று பெற்று கொடுத்தல்.

மேற்கண்ட பழுது வேலைகள் பார்க்கவும் அதற்கான செலவு தொகை ரூ.43,000/– க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4409/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 160**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி குடிநீர் விநியோக பிரிவில் 15 பணியிடங்கள் காலியாக உள்ளதன் காரணமாக குடிநீர் விநியோகப் பணிகளை முறையாக மேற்கொள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகம் மூலமாக Security Guard 4 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது 15 பணியிடங்கள் காலியாக உள்ளதற்கு 4 காவலர்கள் மட்டும் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் நடைபெற இடையூறாக உள்ளது. எனவே குடிநீர் விநியோக நலன் கருதி இரண்டு Security Guard (12 மணி நேரம் பணி ) ஓட்டுநர் தகுதியுடன் ஒப்பந்த அடிப்படையில் TEXCO நிறுவனம் மூலமாக பணியமர்த்திக் கொள்ளவும் அதற்கான ஒரு ஆண்டு உத்தேச செலவு ரூ.10,07,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** குடிநீர் பிரிவில் பணியிடங்கள் காலியாக உள்ளதால் Security Guard 2 நபர்கள் ஓட்டுநர் தகுதியுடன் ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு வைத்துக் கொள்ளவும் அதற்கான ஒரு ஆண்டு உத்தேச செலவு ரூ.10,07,000/- அனுமதிக்கலாம். குடிநீர் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 1731/2020/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 161**

நகராட்சி அலுவலக ஜீப் TN-67- 5862 வாகனத்தில் பின்வரும் பழுது வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

1) இஞ்ஜின் ஆயில் சர்வீஸ் மற்றும் கியர் கிரவுண் கூலிங் ஆயில் மாற்றுதல்,
2) 4 வீல் கிரிஸ் பேக்கிங், பேரிங் மாற்றுதல்.
3) பிரேக் செக்கப், ரியர் வீல் சிலிண்டர் மாற்றுதல் பிரண்ட் பிரேக் பேடு புதியது மாற்றுதல்.
4) கிளட்ச் கம்பிளிட் மாற்றுதல்.
5) ஜாயின்ட், ஸ்டார், யோக் டித் புதியது மாற்றுதல்.
6) வைப்பர் பிளேடு புதியது மாற்றுதல் ஹாரன் புதியது மாற்றுதல்.
7) பிரண்ட் எக்ஸ்ட்ரா லைட் 2 புதியது மாற்றுதல்.
8) சைலன்சர் ரப்பர் புதியது மாற்றுதல்.
9) பேன்பெல்ட், பவர் ஸ்டியரிங் பெல்ட் புதியது மாற்றுதல்.
10) வாட்டர் சர்வீஸ் வீல் அலாய்மெண்ட் பேலன்ஸ் மாற்றுதல்.

மேற்கண்ட பழுது வேலைகள் பார்க்கவும் அதற்கான செலவு தொகை ரூ.40,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4784/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 162</u>**

விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 265/ செ.ம.தொ. 2021 நாள் 23.07.2021 ம் தேதிய கடிதத்தில் தீக்கதிர் நாளிதழ் நாளிதழ் சார்பில் தின சிறப்பிதழ் வெளிவரவுள்ளதால், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பாக விளம்பரங்களை வெளியிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதன்படி இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கோவிட்-19, தடுப்புப் பணிகள் பற்றிய விவரங்கள் மற்றும் விழிப்புணர்வு குறித்த செய்திகளை தீக்கதிர் நாளிதழில் சுதந்திர தின சிறப்பிதழில் விளம்பரம் செய்வதற்கும், அதற்குண்டான விளம்பர கட்டணத்தை பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி விளம்பரம் மேற்கொண்டதையும், விளம்பரக் கட்டணம் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 2648/2021/H1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 163</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25, மேலரதவீதி, கதவு எண் 93, 93/1 மற்றும் 167.70 167/1 . வரிவிதிப்பு எண்கள் 130/025/00360, 130/025/00847, 130/025/00326, 130/025/00835 ஆகியவைகளுக்கு சொத்துவரி கூடுதலாக விதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை ரத்து செய்ய கோரி சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் திரு. ராஜகோபாலன் த/பெ. என்.கே. கோபால் என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களை 3 வது பிரதிவாதியாக சேர்த்து W.P.( MD) No.9605-2021 ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக திரு. பி. ஸ்ரீனிவாஸ், வழக்கறிஞர் ஆஜராகவும், அதற்கான செலவுத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 3351/2021/A1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 164</u>**

விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 225/செ.ம.தொ.அ/2021 நாள் 05.07.2021 தினகரன், தமிழ்முரசு நாளிதழ் சார்பில் " சுதந்திர தின சிறப்பு தொழில் மலர் 2021 " வெளியிட உள்ளதால் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள், திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான விளம்பரங்களை வெளியிட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கோவிட்-19 தடுப்பு பணிகள், பற்றிய விளம்பரங்கள் மற்றும் விழிப்புணர்வு குறித்த செய்திகளை தமிழ் முரசு நாளிதழில் சுதந்திர தின சிறப்பு தொழில் மலர் 2021 ல் விளம்பரம் செய்வதற்கும் அதற்குண்டான விளம்பரக் கட்டணத்தை பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்வதற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**
1) அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி விளம்பரம் மேற்கொண்டதையும், செலவினம் மேற்கொண்டதையும் ஏற்கலாம்.

**ந.க.எண் 2648/2021/H1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 165</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான பேருந்து நிலையத்தில் ஓரிடத்தில் நிலையில்லாமல் சம்சா, பால்கோவா, பூ மற்றும் இதர பொருட்கள் விற்பனை செய்பவர்களிடம் தினந்தோறும் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிமையானது இந்நகர் மன்ற தீர்மான எண் 628 நாள் 27.03.2021 ன் படி திரு. சடையப்பன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது. ( வரி விதிப்பு எண் 130/BP105/00007) மேற்கண்ட குத்தகையின் உரிமை காலம் 31.03.2021 அன்றுடன் முடிவடைந்து விட்டது. மேற்கண்ட குத்தகை இனமானது திரு. வேல்முருகன் என்பவருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 62 நாள் 25.02.2021 ன் படி 01.04.2021 முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ( வரி விதிப்பு எண் 130/BD01/00040) இந்நிலையில் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு திரு. சடையப்பன் என்பவர் பெயரில் கணிணியில் கேட்பு ரூ.1,15,184/- ( வரி விதிப்பு எண் 130/BP105/00007) காண்பிக்கப்படுகிறது. இது கணிணியில் தொழில் நுட்ப கோளாறு காரணமாக 2021-22 ம் ஆண்டுக்கு கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு எண் வரி விதிப்பு எண் 130/BP105/00007 க்கான கேட்பினை கணிணியில் 01.04.2021 முதல் நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**

1) திரு. சடையப்பன் என்பவரின் குத்தகை உரிமை காலம் 31.03.2021 ல் முடிவடைந்து விட்டது.
2) 01.04.2021 முதல் திரு. வேல்முருகன் என்பவருக்கு குத்தகை இனம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**ந.க.எண் 7806/2017/A3**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 166</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களான சமுதாய கழிப்பறைக்கு மூன்று ஆண்டு குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் கீழ்கண்டுள்ள விபரப்படி 2021-22 ம் ஆண்டுக்கு கணிணியில் கேட்பு தவறுதலாக காண்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வரி விதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | கேட்பு தொகை | சமுதாய கழிப்பறை | குத்தகை உரிமகாலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 130/SC03/00020 | திரு. கலைச் செல்வம் | ரூ.244259/- | ஓட்டமடம் தெரு | 01.12.2018 முதல் 30.11.2021 வரை |
| 2 | 130/SC03/00021 | திரு. சுப்புராஜ் | ரூ.224579/- | கல்லணை ஓடைத் தெரு | 01.12.2018 முதல் 30.11.2021 வரை |
| 3 | 130/SC03/00022 | திருமதி. முனீஸ்வரி | ரூ.58460/- | மாரியம்மன் கோவில் தெரு | 01.12.2018 முதல் 30.11.2021 வரை |
| 4 | 130/SC03/00019 | திரு. கிருஷ்ணமூர்த்தி | ரூ.520931/- | பெருமாள்பட்டி காமராஜர் நகர் பாலம் அருகில் | 01.01.2019 முதல் 30.12.2021 வரை |
| 5 | 130/SC03/00037 | திரு. இளவரசன் | ரூ.30098/- | எல்லையம்மன் கோவில் தெரு | 01.01.2019 முதல் 30.12.2021 வரை |
| 6 | 130/SC03/00026 | திரு. மாரியப்பன் | ரூ.185220/- | சக்கரைக்குளம் தெரு | 01.01.2019 முதல் 30.12.2021 வரை |
| 7 | 130/SC03/00023 | திரு. அங்கப்பன் | ரூ.23500/- | மடவார்விளாகம் கழிப்பறை | 01.01.2019 முதல் 30.12.2021 வரை |
| 8 | 130/SC03/00028 | திரு. மணிகண்டன் | ரூ.38202/- | மாரியம்மன் கோவில் தெரு கழிப்பறை | 01.01.2019 முதல் 30.12.2021 வரை |
| 9 | 130/SC03/00027 | திரு. முனீஸ்வரன் | ரூ.24311/- | பெருமாள்பட்டி தெரு கழிப்பறை | 01.01.2019 முதல் 30.12.2021 வரை |
| 10 | 130/SC03/00024 | திரு. தங்கஉமையர் | ரூ.150491/- | மடத்துப்பட்டி தெரு | 01.01.2019 முதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கழிப்பறை | 30.12.2021 வரை |
| 11 | 130/SC03/00025 | திரு. காட்டுராஜா | ரூ.289406/- | பெருமாள்பட்டி மெயின் ரோடு கழிப்பறை | 01.01.2019 முதல் 30.12.2021 வரை |
| 12 | 130/SC03/00017 | திரு. மணிகண்டன் | ரூ.38202/- | மங்காபுரம் மேல்பக்கம் தெரு கழிப்பறை | 01.01.2019 முதல் 30.12.2021 வரை |
| 13 | 130/SC03/00018 | திரு. ராமசாமி | ரூ.23616/- | கீழப்பட்டி தெரு கழிப்பறை | 01.01.2019 முதல் 30.12.2021 வரை |
| 14 | 130/SC03/00039 | திரமதி. மகேஸ்வரி | ரூ.42253/- | அய்யம்பட்டி கழிப்பறை | 13.03.2019 முதல் 11.03.2022 வரை |

வரிசை எண் 1 முதல் 14 வரையிலான சமுதாய கழிப்பறைகளுக்கும் மூன்றாம் ஆண்டு (2020-21) குத்தகை இனங்களுக்கான குத்தகை தொகை உரிய குத்தகைதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு தணிக்கைக்கும் காண்பிக்கப்பட்டு விட்டது. தற்சமயம் 2021-22 ம் ஆண்டில் மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு கணிணியில் தவறுதலாக கேட்பு காண்பிக்கப்படுகிறது. அதன்படி மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு 2021-22 ம் ஆண்டிற்கான கேட்பினை கணிணியில் நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு :-**

1) வரிசை எண் 1 முதல் 14 வரையிலான சமுதாய கழிப்பறைகளுக்கும் மூன்றாம் ஆண்டு ( 2020-21) குத்தகை தொகைகள் குத்தகைதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு விட்டது. எனவே கூடுதலாக வருடம் முழுமைக்கும் 3/2022 முடிய தவறாக கேட்பு ஏற்றம் செய்யப்பட்டதை நீக்கம் செய்யலாம். ந.க.எண் 7284/2018/அ 3

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 167**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி என்.ஜி.ஓ. காலனி பூங்காவில் உடற்பயிற்சி சாதனம் புதிதாக வாங்கி பொருத்துதல் பணியினை ரூ.2,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 18.02.2021 ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு. எம். கே. ஜின்னா, ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர் | மதிப்பீட்டை விட 0.16% குறைவு |
| 2 | திரு. கோ. வெங்கடேசன், ஒப்பந்தக்காரர், ஸ்ரீவில்லிபுத்தூர். | மதிப்பீட்டை விட 2.19% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம். கே. ஜின்னா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.16% சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 160/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 168**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைப்பட்டி நீர் தேக்க தொட்டியில் உள்ள மோட்டார்கள் மற்றும் நகராட்சி அலுவலக வளாக நீர் தேக்க தொட்டியில் உள்ள மோட்டார்களில் பழுதுகள் ஏற்படும் போது அதனை சரி செய்ய பின்வரும் மின் பொருள்கள் மற்றும் பைப் சாமான்கள் தேவைப்படுகிறது.

| வ.எண் | பொருள்கள் விவரம் | அளவு |
|---|---|---|
| 1 | 8 எம்.எம். ரோப் | 2 |
| 2 | 10 எம்.எம். ரோப் | 1 |
| 3 | 200 எம்.எம். கிரீஸ் | 1 |
| 4 | 2.5 கிரீன் ஓஸ் | 6 |
| 5 | 2.5 கிரீன் ஓஸ் கிளிப் | 2 |
| 6 | எம். சீல் பெரியது | 1 |
| 7 | 4 ஜி.ஐ. கிளாம் பைப் | 8 |
| 8 | 3.5 போல்ட் | 4 |
| 9 | ½ MS வாசர் | 8 |
| 10 | டேப் ரோல் | 2 |
| 11 | யான் | 2 |
| 12 | செல்லாக் | 1 |

மேற்கண்ட பொருள்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.10,250/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-**

மோட்டார்கள் பராமரிப்பு செய்ய பொருள்கள் வாங்கவும் அதற்கான செலவு தொகை ரூ.10,250/- க்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் கோரியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4523/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 169**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் நடைபெறும் போது பகிர்மானக் குழாய் மற்றும் பம்பிங் மெயின் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்யவும் மேலும் வால்வுகளில் ரோப் வைத்து சரி செய்யவும் மேலும் வேர் அடைப்புகளை நீக்கவும் அவசரஅவசியம் கருதி குடிநீர் பணி என்பதால் உடன் சரி செய்ய வேண்டியுள்ளது. தற்சமயம் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோரப்படாததால் 24.04.21 முதல் 13.07.21 வரை பொருள்களை மட்டும் வாங்கி அலுவலக பணியாளர்களை வைத்து சரி செய்யவும் அதற்கான பொருள்களை மட்டும் வாங்கி கொடுக்கவும் அதற்கான செலவுத் தொகை ரூ.40,000/ க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மொத்த தொகை |
|---|---|---|
| 1 | திரு. முத்துராமகிருஷ்ணன் | ரூ. 39929.20 |
| 2 | திரு. செல்வம் எலக்ட்ரிக்கல்ஸ் | ரூ. 41853.80 |
| 3 | திரு. கே. தங்கவேல் | ரூ. 43604.00 |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. மு. முத்துராமகிருஷ்ணன் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-**

குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய் மற்றும் பம்பிங் மெயின் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்யவும் மேலும் வால்வுகளில் ரோப் வைத்து சரி செய்யவும் மேலும் வேர் அடைப்புகளை நீக்க அதற்கான பொருள்களை மட்டும் வாங்கி கொடுக்கவும், அதற்கான செலவுத் தொகை ரூ.40,000/- க்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. மு. முத்துராமகிருஷ்ணன் விலைப்புள்ளியை தனி அலுவலர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்புக் கொண்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 170</u>**

நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு Toner வாங்க 21.05.2021 ம் தேதி பின்வரும் மூன்று நிறுவனங்களில் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ.எண் | பணி விவரம் | **சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்.** | | **K.B. சிஸ்டம்ஸ் சர்வீஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்.** | | **டிஜிடெக் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர்.** | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விலை | தொகை | விலை | தொகை | விலை | தொகை |
| 1 | Toner- 10 | 1500 | 15000 | 1600 | 16000 | 1550 | 15500 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அவசர அவசியம் கருதி ஒப்புக் கொள்ளப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

குறைந்த விலைப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4523/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 171</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ரைட்டன்பட்டித் தெருவில் ரூ.14000/- மதிப்பீட்டில் பகிர்மானக்குழாய் அமைக்க 12.07.2021 ல் பின்வரும் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு. மு. முத்துராமகிருஷ்ணன் | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| 2 | திரு. செல்வம் எலக்ட்ரிக்கல்ஸ் | மதிப்பீட்டை விட 2.67% அதிகம் |
| 3 | திரு. கே. தங்கவேல் | மதிப்பீட்டை விட 6.24% அதிகம் |

மேற்கண்ட **3** விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.மு. முத்துராம கிருஷ்ணன் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. மு. முத்துராமகிருஷ்ணன் விலைப்புள்ளியை தனி அலுவலர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4047/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 172</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி தண்ணீர் தலைமையிட கிணறு எண் 3 ல் ரூ.46000/- மதிப்பீட்டில் புதிய 5 எச்.பி. மோட்டார் சப்ளை செய்து பொருத்த 28.07.2021 ல் பின்வரும் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு. மு. முத்துராமகிருஷ்ணன் | ரூ.46000.00 |
| 2 | திரு. செல்வம் எலக்ட்ரிக்கல்ஸ் | ரூ.47380.00 |
| 3 | திரு. கே. தங்கவேல் | ரூ.48328.00 |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.மு. முத்துராம கிருஷ்ணன் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. மு. முத்துராமகிருஷ்ணன் விலைப்புள்ளியை தனி அலுவலர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4522/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 173</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கோட்டைப்பட்டி நீர்த்தேக்க தொட்டியில் மோட்டார்கள் பழுது பார்க்க ரூ.10250/- மதிப்பீட்டில் பைப் சாமான்கள் வாங்க 28.07.2021 ல் பின்வரும் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு. மு. முத்துராமகிருஷ்ணன் | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு. செல்வம் எலக்ட்ரிக்கல்ஸ் | மதிப்பீட்டை விட 4.24% அதிகம் |
| 3 | திரு. கே. தங்கவேல் | மதிப்பீட்டை விட 7.32% அதிகம் |

மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.மு. முத்துராம கிருஷ்ணன் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. மு. முத்துராமகிருஷ்ணன் விலைப்புள்ளியை தனி அலுவலர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4523/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 174</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கிருஷ்ணன் கோவில் தெருவில் உள்ள கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் ரூ.1,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 29.07.2021 ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு. அ. சடையப்பன் | மதிப்பீட்டை விட 0.004% குறைவு |
| 2 | திரு. எம். கே. ஸ்ரீதரன் | மதிப்பீட்டை விட 7.94% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. சடையப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.004% சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1) நகர்மன்ற தீர்மான எண் 147 நாள் 30.06.2021 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. சடையப்பன் என்பவருக்கு பணி ஆணை வழங்கலாம்.

**ந.க.எண் 3386/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 175</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி கற்பக விநாயகர் கோவில் தெரு பாலம் அருகில் உள்ள பேவர் பிளாக் சாலை உயர்த்தி சீரமைக்கும் பணியினை ரூ.1,35,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 29.07.2021 ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு. அ. பாபு | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| 2 | திரு. கோ. வெங்கடேசன் | மதிப்பீட்டை விட 0.94% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.06% சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1) நகர்மன்ற தீர்மான எண் 124 நாள் 31.05.2021 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2) குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அ. பாபு என்பவருக்கு பணி ஆணை வழங்கலாம்.

**ந.க.எண் 5605/2020/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 176</u>**

2020-21 ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காந்தி நகர் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணியினை ரூ.2,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள 29.07.2021 ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விலை விகிதம். |
|---|---|---|
| 1 | திரு. மு. முத்துராமகிருஷ்ணன் | மதிப்பீட்டை விட 0.34% குறைவு |
| 2 | திருமதி. ஜி.ஏ. முத்துலட்சுமி | மதிப்பீட்டை விட 3.00% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மு. முத்துராமகிருஷ்ணன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.34% சதவீதம் குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>**

1) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் சி 3/3822/2019, நாள் 11.02.2021 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2) அனுமதி வழங்கலாம். குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. மு. முத்துராமகிருஷ்ணன் என்பவருக்கு பணி ஆணை வழங்கலாம்.

**ந.க.எண் 1422/2021/E1**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 177</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் சமீபத்திய மழை மற்றும் காற்றின் காரணமாக பின்வரும் இடங்களில் உள்ள மரங்கள் முறிந்து விழுந்துள்ளது.

| | |
|---|---|
| மடவார்விளாகம் பகுதி | 10 மரக்கிளைகள். |
| கற்பக விநாயகர் கோவில் தெரு | 2 மரக்கிளைகள். |
| சக்கரைக் குளம் தெரு | 1 மரக்கிளைகள். |
| நாடக சாலைத் தெரு | 1 மரக்கிளைகள். |
| நகராட்சி அலுவலக வளாகம். | 1 மரக்கிளைகள். |

மரக்கிளைகள் சாலையில் விழுந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் மேற்கண்ட விவரப்படி மரக்கிளைகளை 27.07.2021 ம் தேதி பொது ஏலம் விடப்பட்டதில் பின்வரும் இரண்டு ஏலக்கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு. ஆனந்தகுமார், ஸ்ரீவில்லிபுத்தூர் | ரூ.3000/- |
| 2 | திரு. திருமலை முருகன், ஸ்ரீவில்லிபுத்தூர். | ரூ.2500/- |

திரு. ஆனந்தகுமார், என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-**

பொது மக்களுக்கு இடையூறாக உள்ளதால் உடன் அப்புறப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம். மரக்கிளைகள் சாலையில் விழுந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் அவசர அவசியம் கருதி உயர்ந்த ஏலக்கேள்வி ஒப்புக் கொள்ளப்பட்டு ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

**ந.க.எண் 4409/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 178**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் மக்கள் தொகைக்கு ஏற்ப தினசரி குடிநீர் தேவை 6.80 எம்.எல்.டி. ஆகும். இதில் நகராட்சியின் சொந்த குடிநீர் திட்டமான செண்பகத்தோப்பு பகுதியில் இருந்து மழை காலங்களில் 2.50 முதல் 3.00 எம்.எல்.டி. மற்றும் வறட்சி காலங்களில் 0.50 முதல் 1.00 எம்.எல்.டி. குடிநீர் பெறப்படுகின்றது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாசுதேவ நல்லூர் கூட்டு குடிநீர் திட்டம் மூலமாக 4.50 எம்.எல்.டி. பெறப்பட வேண்டும். ஆனால் குழாய் உடைப்பு, மின் தடை மற்றும் பராமரிப்பு பணிகள் காரணத்தினால் 1.50 முதல் 2.50 எம்.எல்.டி. குடிநீர் மட்டுமே பெறப்படுகின்றது. எனவே நகரின் குடிநீர் தட்டுப்பாட்டை தவிர்த்திட ஏதுவாக ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் வத்திறாயிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தில் இருந்து 2 எம்.எல்.டி. குடிநீர் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டால் நகரின் குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் விநியோகப்பணி சிறப்பாக அமையும். எனவே வத்திறாயிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தில் இருந்து 2 எம்.எல்.டி. குடிநீர் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு பெறுவதற்கான பணியினை ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் சேர்த்து TWAD Board ஆல் செயல்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**ந.க.எண் 4408/2021/E1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 179**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி சுகாதார பிரிவில் இயங்கி வரும் கீழ் வரும் அட்டவணையில் உள்ள வாகனங்களுக்கு வாகன காப்பீடு ( VEHICLE INSURANCE ) 2021-22 ஆம் ஆண்டிற்கு காப்பீடு புதுப்பிக்க வேண்டியுள்ளது. வாகன காப்பீடு புதுப்பித்தல் கட்டணம் பட்டியல் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | வாகனத்தின் பதிவு எண் பெயர் | வாகன காப்பீடு புதுப்பித்தல் காலம் முடிவு 2019-20 | வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டிய காலம 2020-21 | செலுத்த வேண்டிய வாகன காப்பீடு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | TN 67 AZ 1287 டம்பர் பிளேசர் | 25.04.2020 – 24.04.2021 | 16.07.2021 – 05.07.2022 | 31830/- |
| 2 | TN 67 K 4717 ஆட்டோ | 05.08.2021 – 04.08.2022 | 05.08.2021 – 04.08.2022 | 5835/- |
| | | | | 37665/- |

மேற்காண் வாகனங்களுக்கு வாகன காப்பீடு VEHICLE INSURANCE 2021-22 ஆம் ஆண்டிற்கு காப்பீடு புதுப்பிக்கவும் காப்பீட்டுத் தொகையை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்திற்கு காப்பீடு கட்டணம் நகராட்சி பொது நிதியின் கீழ் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 4036/2013/H2**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 180**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள டிப்பர் லாரி வாகன எண் TN 67 AX 5009 எண் கொண்ட வாகனம் தகுதி சான்று காலம் 11.08.2021 ல் முடிவடைகிறது. மேற்படி டிப்பர் லாரி வாகனத்திற்கு 2021-22 ம் ஆண்டிற்கு வாகன தகுதி சான்று பெற வேண்டிய அவசியம் கருதி பழுது நீக்கப் பணி மேற்கொள்ளவும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெறும் அனைத்து பணிக்கும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.45,000/- ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 2021/H1**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 181**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள டிப்பர் மஸ்தா வாகன எண் TN 67 K 0312 எண் கொண்ட வாகனம் தகுதி சான்று காலம் 08.07.2021 ல் முடிவடைகிறது. மேற்படி மஸ்தா வாகனத்திற்கு 2021-22 ம் ஆண்டிற்கு வாகன தகுதி சான்று பெற வேண்டிய அவசியம் கருதி சான்று பெறும் அனைத்து பணிக்கும் டெண்டர் கோரி நடவடிக்கை எடுக்கவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.48,000/- ஐ நகராட்சி பொது நிதி 2021-22 ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 3684 /2021/H2**

**தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 182</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள டம்பர் பிளேசர் வாகன எண் TN 67 AZ 1287 எண் கொண்ட வாகனம் தகுதி சான்று 15.08.2021 ல் முடிவடைகிறது. மேற்படி டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 2021-22 ம் ஆண்டிற்கு வாகன தகுதி சான்று பெற வேண்டிய அவசியம் கருதி பழுது நீக்கப்பணி மேற்கொள்ளவும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெறும் அனைத்து பணிகளும் டெண்டர் கோரி நடவடிக்கை எடுக்கவும் உத்தேச செலவினம் ரூ.33,000/- ஐ நகராட்சி பொது நிதி 2021-22 ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 4437 /2021/H2**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் எண் : 183</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள JCB வான எண் TN 67 AQ 8749 எண் கொண்ட வாகனத்தில் உள்ள சூவிங் சிலிண்டர், பூம் சிலிண்டர், ஸ்டிக் சிலிண்டர், பூம் சிலிண்டர் இருப்பு புஸ் பழுதாகிவிட்டதால் பழுது நீக்கப்பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.32,000/- நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 4395 /2021/H2**

**<u>தீர்மானம் :- அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**